# வாவு வஜீஹா வனிதையர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

## காயல்பட்டணம்

## 16ஆவது விளையாட்டு விழா 20.05.2022

காயல்பட்டணம், வாவு வஜீஹா வனிதையர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 16ஆவது ஆண்டு விளையாட்டு விழா 20.05.2022 வெள்ளிக்கிழமை மதியம் 2.30 மணியளவில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கியது. திருச்செந்தூர் ஆதித்தனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் உடற்கல்வி இயக்குநர் முனைவர் D.ஜிம் ரீவ்ஸ் சைலண்ட் நைட் M.P.Ed., M.Phil., Ph.D., N.S.N.I.S. சிறப்பு விருந்தினராக வருகை புரிந்தார்கள்.

விளையாட்டு போட்டிகளின் ஆரம்பமாக ஒலிம்பிக் கொடியை சிறப்பு விருந்தினரும், தேசியக் கொடியை கல்லூரி முதல்வர் முனைவர் R.C. வாசுகி M.A., Ph.D., DGT அவர்களும், கல்லூரி கொடியைக் கல்லூரி நிறுவனர் தலைவர் அல்ஹாஜ் வாவு S. செய்யது அப்துர் ரஹ்மான் அவர்களும் ஏற்றினர். ஐந்து அணி சார்ந்த மாணவியர் குழுவினரின் அணிவகுப்பு மரியாதையைச் (March Post) சிறப்பு விருந்தினர் ஏற்றுக்கொண்டார். விளையாட்டு போட்டிகளைக் கல்லூரி நிறுவனர் தலைவர் அல்ஹாஜ் வாவு S. செய்யிது அப்துர் ரஹ்மான் அதிகாரபூர்வமாக தொடக்கி வைத்தார். கல்லூரி செயலர் ஹாஜி வாவு M.M.மொகுதஸீம் BA (CS), மற்றும் கல்லூரி முதல்வர் முனைவர் இரா.செ.வாசுகி M.A., Ph.D., DGT., மற்றும்கல்லூரி துணைச்செயலர்,ஹாஜி ஹாபீஸ் வாவு S.A.R.அஹமது இஸ்ஹாக் ஆலிம் M.A., Azhari (Egypt), முன்னிலை வகித்தனர்.

ஒலிம்பிக் சுடரைச் சிறப்பு விருந்தினர் ஏற்றி வைக்க மாணவியர் A. கமலி,M. ஜோஸ் குயின் ரிஸ்வானா,C. சிநேகா ஆகியோர் ஒருவர் பின் ஒருவராகப் பெற்றுக் கொண்டு நிறைவாக விளையாட்டுச் செயலர் மூன்றாமாண்டு வணிக செயலாற்றியல் துறை மாணவி M. முத்துசெல்வி ஒலிம்பிக் சுடரை ஏற்றி உறுதிமொழி கூற, மாணவியர் வழிமொழிந்தனர்.

தொடர்ந்து 100 மீட்டர், 200 மீட்டர், 400 மீட்டர் தொடர் ஓட்டமும்,குண்டு எறிதல், நீளம் தாண்டுதல், இறுதிப்போட்டியும் மற்றும் முன்னாள் மாணவியர், பெற்றோர், சிறப்பு விருந்தினர், மழலையர் ஆகியோருக்கான விளையாட்டுப் போட்டிகளும் நடைபெற்றன.

மாணவியர் தம் திறமையை வெளிப்படுத்தும் வண்ணம் கூட்டு உடற்பயிற்சி, சிலம்பம், செய்குன்றம்,Aerobic Dance ஆகியவற்றை நிகழ்த்திக் காட்டினார்.சிறப்பு அம்சமாக திருநெல்வேலி, சதக்கத்துல்லா அப்பா கல்லூரி மற்றும் ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி மாணவியர் நிகழ்த்திய சிலம்பாட்டம் கண் கவர் காட்சியாக இருந்தது.

மாலை 7.00 மணியளவில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் மூன்றாமாண்டு ஆங்கில இலக்கிய மாணவி M.A.K. பாத்திமா முபாரிகா கிராத் ஓத, பரிசளிப்பு விழா தொடங்கியது. கல்லூரி முதல்வர் முனைவர் R.C. வாசுகி M.A., Ph.D. DGT வரவேற்புரையும், அறிமுக உரையும் நல்கினார். உடற்கல்வி கல்வி அறிக்கையை கல்லூரியின் உடற்கல்வி இயக்குநர் திருமதி S. மெர்சி M.P.Ed., M.Phil., PG Diploma சமர்ப்பித்தார். சிறப்பு விருந்தினர்களுக்கு கல்லூரி நிறுவனர் தலைவர் நினைவுப்பரிசினை வழங்கினார்.

திருச்செந்தூர் கல்லூரியின் உடற்கல்வி இயக்குநர் முனைவர் D.ஜிம் ரீவ்ஸ் சைலண்ட் நைட் மற்றும் திருநெல்வேலி, சதக்கத்துல்லா அப்பா கல்லூரி, உடற்கல்வி இயக்குநர் S. செய்யது அலி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார். சிறப்பு விருந்தினர் திருச்செந்தூர் அனைத்து மகளிர் காவல் ஆய்வாளர் திருமதி S. கௌரி மனோகரி B.A சிறப்புரையாற்றினார். சிறப்பு விருந்தினர் தம் சிறப்புரையில், மாணவிகள் ஒழுக்க நெறிமுறைகளை உணர்ந்து வாழ்வில் இழுக்காது வாழும் வழிமுறைகளை நல்லுரையாக வழங்கினார்.

விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவியரைப் பாராட்டிப் பரிசு பதக்கங்கள், கோப்பைகளை சிறப்பு விருந்தினர், கல்லூரி நிறுவனர் தலைவர், கல்லூரிச் செயலர், கல்லூரி துணைச்செயலர், கல்லூரி முதல்வர்,IQAC ஒருங்கிணைப்பாளர், சதக்கத்துல்லா அப்பா கல்லூரி உடற்கல்வி இயக்குநர் ஆகியோர் வழங்கினர்.

அணிவாரியான சாதனையாளர் வரிசையில் அதிக புள்ளிகளைப் பெற்று வைர அணியினர் (Diamond) முதலிடத்தையும் (Overall Champion),மரகத அணியினர் (Emerald) இரண்டாம் இடத்தையும் பெற்றனர். மரகத அணியினை சேர்ந்த முதலாமாண்டு கணிதவியல் மாணவி A. வீர அபநயா இவ்வருட விளையாட்டுச் சாதனையாளர் (Individual Championship) கோப்பையைப் பெற்றார்.

கல்லூரி செயலர் ஹாஜி வாவு M.M. மொகுதஸீம் B.A (CS) அனைவருக்கும் நன்றி கூறினார். இவ்விழாவில் கல்லூரி நிர்வாகக்குழு உறுப்பினர்கள், பெற்றோர்கள்,முன்னாள் மாணவியர், உதவிப் பேராசிரியர்கள், மாணவியர் கலந்து கொண்டனர்.

மூன்றாமாண்டு ஆங்கில இலக்கிய மாணவி N.A.K.ஜம் ஜம் ஹாஜரா துஆ ஓதினார். நிறைவாக நாட்டுப்பண்ணுடன் கல்லூரியின் 16ஆவது விளையாட்டு விழா இனிதே நிறைவடைந்தது.